பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 01 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் நாட்டில் பெரிய மாற்றங்களை கொண்டுவரலாம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2)** கடல்சார் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் இந்தியா முக்கியப் பங்காற்றுவதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

**3)** வேலூர் மாவட்டத்தில் 3 இடங்களில் விரைவில் சிப்காட் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

**4)** சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் புகையில்லா போகி பண்டிகையை கொண்டாடுமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

**5)** விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி 77 ரன் வித்தியாசத்தில் கேரளாவை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் நாட்டில் பெரிய மாற்றங்களை கொண்டுவரலாம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தாக்கம் குறித்த உச்சிமாநாடு தொடர்பாக இன்று புதுதில்லியில் உள்ள தமது இல்லத்தில் நடைபெற்ற வட்டமேசை கலந்தாய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய பிரதமர், இந்த உச்சிமாநாட்டிற்கு இந்தியா தலைமையேற்க உள்ளதாக தெரிவித்தார்.

தொழில்நுட்பத் துறையில் இந்தியா முக்கிய பங்காற்றி வருவதாக குறிப்பிட்ட பிரதமர், ஸ்டார்ட் அப் நிறுவனங்களும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப தொழில்முனைவோரும் எதிர்கால இந்தியாவை உருவாக்கும் சிற்பிகள் என்று கூறினார்.

இந்த துறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு தேவையான திறனும், புதுமை கண்டுபிடிப்புகளை கொண்டுவருவதற்கான ஆற்றலும் இந்தியாவுக்கு உள்ளதாக தெரிவித்த பிரதமர், பெரிய அளவில் இந்த தொழில்நுட்பத்தை நாம் செயல்படுத்துவோம் என்றும் கூறினார்.

தனித்துவம் மிக்க செயற்கை நுண்ணறிவு திட்டத்தை இந்தியா செயல்படுத்தும் என்று அவர் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா மற்றும் உலகிற்கான உற்பத்தி என்ற சிந்தனையோடு இதனை இந்தியா திறம்பட செயல்படுத்தும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை குறைந்த செலவில் கொண்டுவருவதற்கான முறைகளை இந்தியா செயல்படுத்தும் என்று கூறிய அவர், இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வடிவமைப்பு உள்ளார்ந்த வளர்ச்சியை மேம்படுத்துவதாகவும், மாநில மொழிகளை ஊக்குவிக்கும் வகையிலும் அமையும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவு புத்தாக்க நிறுவனங்கள் துணை புரியும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், செயற்கை நுண்ணறிவு புத்தாக்க தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>

கடல்சார் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் இந்தியா முக்கிய பங்காற்றுவதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று AMET கடல்சார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டின் கடல் வளத்தை பாதுகாக்க திறன் மிக்க இளைஞர்களை இப்பல்கலைக்கழகம் உருவாக்கி தருவதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>

வேலூர் மாவட்டத்தில் 3 இடங்களில் விரைவில் சிப்காட் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

காட்பாடியில் இன்று குடும்ப அட்டைதார்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கி பேசிய அவர், இந்த தொழிற்சாலை மூலம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் புகையில்லா போகி பண்டிகையை கொண்டாடுமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, அந்த வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் பொருட்கள், செயற்கை இழையினால் தயாரிக்கப்பட்ட துணிகள், பழைய டயர், காகிதம், ரசாயனம் கலந்த பொருட்களை எரிப்பதால் ஏற்படும் புகை காரணமாக, சுற்றுச்சூழல் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாவதாக தெரிவித்துள்ளது.

புகை மண்டலத்தால் வாகன ஓட்டிகளுக்கு சிரமம் ஏற்படுவதோடு, நச்சு வாயுக்களால் முச்சுத் திணறல் கண் எரிச்சல் போன்ற நோய்கள் ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளது.

போகி பண்டிகையின்போது சென்னை மாநகரத்தின் சுற்றுச்சூழல் காற்று தரத்தினை கண்காணிக்கும் நோக்கில் போகி பண்டிகையன்று 15 இடங்களில் காற்று மாதிரி சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட உள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

இவ்வாண்டும் பொதுமக்கள் புகையில்லா போகி பண்டிகையை கொண்டாடி, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<>>>>

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை மாலை அல்லது இரவில் இலங்கையின் ஹம்பன்தோட்டா பகுதியில் கரையை கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(Sound Byte — செந்தாமரை கண்ணன் (1) - 38 Sec. )*

தமிழக கடலோர பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு செந்தாமரை கண்ணன் கூறினார்.

*Sound Byte — செந்தாமரை கண்ணன் (2) - 40 Sec. )*

<<<<<>>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக உள்ளது.

விதை, உரம் உள்ளிட்ட இடுபொருட்கள் வாங்குவதற்கு இத்திட்டத்தின்மூலம் அளிக்கப்படும் தொகை உதவிகரமாக உள்ளது என்று திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

*(Sound Byte — விவசாயிகள் - 40 Sec.)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருச்சி ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை அருகே புதிய பேருந்து நிலையத்தை மாநில அமைச்சர் திரு கே என் நேரு இன்று திறந்துவைத்தார்.

---------------

தருமபுரியில் மத்திய மக்கள் தொடர்பு கள அலுவலகம் சார்பில் குழந்தை திருமண தடுப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது.

------------------

கோவையில் பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தி அடுத்த மாதம் 22-ஆம் தேதி மாரத்தான் போட்டி நடைபெறவுள்ளதாக மாநகர காவல் ஆணையர் திரு கண்ணன் தெரிவித்துள்ளார்.

----------------

அரியலூரில் தலைக்கவசம் அணிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி காவல்துறை சார்பில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

------------------

**நெல்லை பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக்கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.**

<<<<<>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

**விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி 77 ரன் வித்தியாசத்தில் கேரளாவை வென்றது.**

**அகமதாபாதில் இன்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய தமிழக அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 8 விக்கெட் இழப்பிற்கு 294 ரன் எடுத்தது.**

**295 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய கேரளா அணி 40 புள்ளி இரண்டு ஓவரில், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 217 ரன் எடுத்து தோல்வியடைந்தது.**

-------------

**தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே — சீனாவின் Wushuang Zheng இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

**மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-3 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Kyoka Okamura — தாய்லாந்தின் Plipuech இணையை வென்றது.**

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---------------------

மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்துவும், ஆடவர் இரட்டையர் பிரிவில் சிராக் ஷெட்டி - சாத்விக் சாய்ராஜ் இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<END>>>>>**